## மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை.5அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை: திரு ஜானி டாம் வர்கீஸ்,இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண்.6774/ அ.மஇநிர்–1/2021 நாள்: 02.02 .2022

பொருள்: மாற்றுத்திறனாளிகள்நல ஆணையரகம் , சென்னை– அரசுமறுவாழ்வு இல்லங்கள் பிரிவு – கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அரசுமறுவாழ்வு இல்லத்தில் கருணை அடிப்படையில் 26.05.2020 மு.பமுதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவரும் திரு.த.நிர்மல்குமார் என்பவருக்கு 26.05.2020 மு.ப முதல் பணிவரன் முறை முடித்தும் மற்றும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.235, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.26.09.2013
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகசீர்திருத்தத்துறை நாள்.01.08.2018
3. மாற்றுத்திறனாளிகளுக்கானமாநிலஆணையர் அவர்களின் செ.மு.ந.க.எண்.8224/நிர்2/2019, நாள்.13.03.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) த்துறை நாள்.23.01.2020

-----------

ஆணை:

பார்வை 3ல் கண்ட செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் பணிநியமத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் அடிப்படையிலும் இறந்தஅரசு ஊழியர் திரு.வே.தயாநிதி, உதவியாளர், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் சென்னை என்பவரது வாரிசுதாரர் திரு.த.நிர்மல்குமார் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அடிப்படை பணியாளர் தொகுதி மற்றும் சார்நிலைபணிகளுக்கான விதிகள் பொது விதி 10(அ) 1ன்கீழ் தற்காலிக அடிப்படையில் கிருஷ்ணகிரி, பர்கூர், அரசுமறுவாழ்வு இல்லத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவருகிறார்.

2) பார்வை 2மற்றும் 4ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையத்தின் இசைவு தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளதனைத் தொடர்ந்து, தற்காலிக பணியமைப்பு விதிகளின்படி தமிழ்நாடு அரசுபணியாளர் பணிநிபந்தனைசட்டம் 2016, பிரிவு 28(1) ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 26.05.2020(மு.ப.) முதல் பணிவரன்முறை செய்தும், தொடர்ச்சியாக 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவத்தில் மேற்படிதனியர் கீழே குறிப்பிட்டதேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

(அ) அலுவலகநடைமுறைநூல் (DOM)

(ஆ) இளநிலைஉதவியாளருக்கானஅடிப்படைபயிற்சி

4) தனியரின் பணிப்பதிவேட்டில், தனியரின் பணிவரன்முறைசெய்தவிவரத்தின் பதிவுகள் மேற்கொள்ளுமாறு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்/-)ஜானி டாம் வர்கீஸ்

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

// ஆணைப்படி//

2/2/2022

உதவி தனி அலுவலர்(பொ)

2/2/22

பெறுநர்
திரு.த.நிர்மல்குமார்
இளநிலைஉதவியாளர்,
அரசுமறுவாழ்வுஇல்லம் பர்கூர்

நகல்
1.நிர்வாக அலுவலர்(பொ)
அரசுமறுவாழ்வுஇல்லம், பர்கூர்
கிருஷ்ணகிரி.

2.அரசுசெயலாளர்
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
தலைமைசெயலகம், சென்னை–9.

3.இருப்புக்கோப்பு/உதிரி .